REGD. No. M. 6311

PHONE No. 55630

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 250

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

| சந்தா விபரம் | |
|---|---|
| உள்நாடு (இலங்கை உட்பட) | |
| ஆண்டு | ரூ. 24—0—0 |
| 6 மாதம் | ரூ. 12—0—0 |
| 3 மாதம் | ரூ. 6—0—0 |
| வெளிநாடு: | |
| ஆண்டு | ரூ. 30—0—0 |
| 6 மாதம் | ரூ. 15—0—0 |
| 3 மாதம் | ரூ. 7—8—0 |

"THE NAM NADU" A TAMIL DAILY: THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சென்னை: பங்குனி 20௳ வெள்ளி (2—4—54) ★ ★ ★ வெளியூர்: பங்குனி 21௳ சனி (3—4—54)

# காங்கிரஸ் வெற்றிபெற வரிப் பணமா?

## மில் துணி மீது வரி

### மத்திய நிதி மந்திரியிடம் சென்னை குழு முறையீடு

புதுடில்லி, மார்ச் 31—

"ஆலைத் துணிகள் மீது, ரூபாய் ஒன்றுக்கு 15 தம்படிகள் வீதம் கூடுதலான விற்பனை வரியை விதிக்க சென்னை அரசாங்கம் உத்தேசித்துள்ளதைக் கைவிடும்படியாக இந்திய அரசாங்கம் செய்ய வேண்டும்"

என்று ஒரு மனுவை இந்திய நிதி அமைச்சரிடமும், வாணிபத் தொழில் துறை அமைச்சரிடமும், சென்னை துணி வணிகத் துறைக் குழுவின் தலைவர் டாக்டர் ஆர் எம். அழகப்ப செட்டியார் அளித்தார்.

* * *

### சென்னை மாநிலத்தில் கடையடைப்பு

சென்னை, ஏப் 2—

துணிகள் மீது ரூபாய்க்கு 15 தம்படி வீதம் அதிகப்படி விற்பனை விதிக்கவிருப்பதைக் கண்டிக்க சென்னை மாநிலத்திலுள்ள எல்லாத் துணி வியாபாரிகளும் ஏப்ரல் 2, 3-ந் தேதிகளில் கடையடைப்பை மேற்கொண்டுள்ளனர்.

★

### நகை வியாபாரிகள் கடையடைப்பு

சென்னை, ஏப் 2—

சென்னையிலும், மற்ற எல்லா ஊர்களிலுமுள்ள நகைக் கடைகள் 1-ந் தேதி முதல் 3-ந் தேதி வரை கடையடைப்பை மேற்கொண்டுள்ளன; புதிய விற்பனை வரியைக் கண்டித்து கடைகளையும், பட்டறைகளையும் மூடிவைக்குமாறு நகை வியாபாரிகள் சங்கம் கேட்டுக் கொண்டது.

—( : )—

## 'விளக்கம் பெறல்' எனும் போர்வையில் ரூ. 11 லட்சம் மானியம்

—o—

### ம. பி. சர்க்காரின் விபரீதம்!

### அமைச்சர்களே செலவிட உரிமையா?

### செலவிடுவதைத் தடுக்க உயர்நீதிமன்றத்தில் மனு

நாகபுரி, ஏப்ரல் 1—

மத்திய பிரதேச காங்கிரஸ் சர்க்கார், 54—55-ம் ஆண்டிற்கு, அமைச்சர்கள் ஊர்சுற்றி, 'விளக்கம் பெறல்' என்ற வகைக்காக ரூ. 11 லட்சத்தை, 'விவரம்' எதுவும் தராமல், ஒதுக்கி வைத்துக் கொண்டது. இப்படி விவரம் காட்டாமல் மானியம் ஒதுக்குவது இந்திய அரசியல் சட்ட விதிகளுக்கு முரணானது எனவும், அப்பெருந் தொகையைச் செலவழிப்பதிலிருந்து அமைச்சர்களுக்குத் தடை விதிக்க வேண்டுமெனவும், மத்திய பிரதேச சட்டசபை எதிர்கட்சித் தலைவரான தக்கர் பியாரிலால் சிங், அம்மாநில உயர் நீதி மன்றத்தில் வழக்கொன்று தொடுத்துள்ளார்.

அம்மனுவில், அவர் மேலும் கூறி இருப்பதாவது:—

போதிய விளக்கமோ, குறிப்போ, விவரமோ தராமல் சட்டசபை ஒப்புதல் பெற்று விட்டதினால், அமைச்சர் குழுவினர் அத்தொகையை செலவிட உள்ளனர்.

விரிவான விளக்கம் தராமல், செலவிற்கு அனுமதி பெறுவது அரசியல் சட்டத்திற்கும், சட்டசபை நடைமுறைவிதிகளுக்கும் 'மோசம்' செய்வதாகும்.

1954—55 வரவு-செலவு திட்டத்தில், 'பிற நிர்வாகச் செலவு' என்ற தலைப்பில் ரூ 11 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதுபற்றி, வரவு-செலவு திட்ட விளக்க அறிக்கையில், அமைச்சர்களும், அவர்கள் துணைவர்களும் விஷய விளக்கம் பெற வேண்டிய சுற்றுப் பயணத்திற்கு என குறிப்பிட்டிருக்கிறது. அமைச்சர்கள் தம் விருப்பப்படி செலவிடப்படும் இத்தொகைக்கு, விரிவான விவரம் குறிப்பிட, அவர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இத்திங்கள் 3-ந் தேதியில் இருந்து இத்தொகையைச் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான திட்டத்தையும் அமைச்சர்கள் உருவாக்கிவிட்டிருக்கிறார்கள். பண்டாரா தொகுதியில் பாராளுமன்றத் தேர்தலும், மத்திய பிரதேசத்தில் உள்ள சிற்றூர் ஊராட்சி மன்றங்களுக்கும், நகராட்சி மன்றங்களுக்கும் தேர்தல் நடைபெற வேண்டியிருக்கிறது. 'மக்கள் தொடர்புண்டாக்கல்-விளக்கம் பெறல்' என்ற போர்வை

(4-ம் பக்கம் பார்க்க)

### சென்னை மின்சார விஸ்தரிப்பு திட்டம்

—:0:—

### பூர்வாங்க வேலைகள் முடிவடைந்து விட்டன

சென்னை, ஏப்ரல் 2—

சென்னை நகரில் மின்சார நிலைய விஸ்தரிப்புக்காக, அமெரிக்க உதவியுடன் மேற்கொள்ளப்படும் திட்டம் சம்பந்தமான பூர்வாங்க வேலைகள் பூர்த்தியாகி விட்டன.

அந்தத் திட்டத்திற்கு அமெரிக்கா அளிக்கும் உதவி 1 கோடி 40 லட்சம் ரூபாய்தான் என்று அறிவிக்கப்படுகிறது.

[குறிப்பு:—'நம் நாடு' இன்றைய இதழின் 3-வது பக்கத்தில், உதவியின் மதிப்புக்கு ரூ. 14 கோடி என்று தவறாக வெளிவந்துள்ளது. அதை, 1,40,00,000 என்று வாசிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.]

இந்தத் திட்டப்படி மின்சார சப்ளை சக்தியை 3 கட்டங்களில் படிப்படியாக அதிகரிக்கப்பட்டவுடன் சென்னை மின்சார நிலையத்தின் மொத்த சப்ளை சக்தி 87,500 கிலோவாட்டாக இருக்கும்; இப்போது 46,000 கிலோவாட்டாக இருக்கிறது.

## நாகர்களின் நிர்வாண ஊர்வலத்தில் 'கூலி சாதுக்கள்'!

### தாடி நீளத்திற்கு ஏற்ப ரூ. 4 முதல் 12 வரை கூலி

அலகாபாத், ஏப். 2—

கும்பமேளாவில் கலந்துகொண்ட நாக சாதுக்களின் நிர்வாண ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்களில் கூலி, பெற்றுக்கொண்டவர்களும் உண்டு. அவரவர்களுக்குள்ள தாடி நீளத்திற்கேற்ப ரூ 4 முதல் ரூ 12 வரையில் கூலி கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த உண்மையை விசாரணை குழு முன், காளிகம்லிவாலா சங்கத்தின் கவுரவ காரியதரிசியாக உள்ள தத் சர்மா அவர்கள் குறிப்பிட்டார். அவர் கூறியதாவது:—

இந்த ஆண்டு, என்னுடைய சங்கத்திலிருந்து 25 ஆட்களை அனுப்ப வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்பட்டது. பத்து நபர்களைத்தான் என்னால் அனுப்ப முடிந்தது. அவர்களிலும் 5 நபர்கள் தான் 'சாதுக்கள்'; மற்றவர் குடும்பஸ்தர்!

இம்முறை தவறானது ஆனாலும், என்னுடைய சங்கத்தினர் என்னுடைய கட்டுப்பாட்டிற்கு அடங்கமாட்டார்களாகையால், நான் ஆள் அனுப்புவதற்கு ஒப்புக்கொள்ளவேண்டியதாகிவிட்டது.

தங்களுடைய ஊர்வலம் சிறிதாக இருப்பதைக் கண்டால், மக்களின் கவனத்தைக் கவர்வதற்காக, நாக சாதுக்கள், கூலிக்கு ஆள் பிடிப்பது வழக்கம்.

சாதாரண காலங்களில் நாக சாதுக்கள் ஆடை அணிந்து கொண்டிருப்பார்கள்; ஆனால், விழா காலத்தில் நிர்வாணமாகக் காட்சி அளிப்பார்கள்.

### துணித் தொழில் கண்காட்சியில் தீ விபத்து

பம்பாய், ஏப். 2—

இங்கு நடைபெறும் துணித் தொழில் துறை கண்காட்சியில் தீ விபத்து ஏற்பட்டதின் விளைவாக 5 கடைகள் எரிந்து சாம்பலாயின. சுமார் ரூ 50 ஆயிரம் பெறுமான சொத்துக்கள் நஷ்டமடைந்தன.

7 தீயணைக்கும் என்ஜின்கள் தீயை அணைத்தன. ரூ 10 லட்சம் பெறுமான சாமான்கள் ஒன்று காப்பாற்றப்பட்டது. இந்த கம்பளத்தில் 18 ஆயிரம் விலையுயர்ந்த கற்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன. இதை நெய்ய 14 மாதங்கள் பிடித்தன.

### சம்பளம் பெற தபால் ஊழியர் மறுப்பு

சென்னை, ஏப்ரல் 2—

ரூ 76 முதல் 100 வரை சம்பளம் வாங்கும் தபால் சிப்பந்திகளுக்கு வீட்டு வாடகை அலவன்ஸ் தர வேண்டாம் என்ற உத்தரவை ஆட்சேபித்து இன்று திருச்சி, மதுரை, தஞ்சாவூர், மைசூர் ஆகிய இடங்களில், தபால், தந்தி ஊழியர்கள் சம்பளம் வாங்க மறுத்துவிட்டனர்.

ஜெகநாதன் படியில் மாநில அடிப்படைச் சம்பளத்துடன் இணைக்கும் கமிட்டியின் சிபார்சுகள் அமுலுக்குக்கொண்டு வரப்பட்டிருப்பதை பொட்டி, 'ஜி' பிரிவு நகரங்களில், (1-லட்சத்திற்கு அதிகமாகவும், 5-லட்சத்திற்குக் குறைவாகவும் மக்கள் தொகை உள்ளவை) வீட்டு வாடகைப்படி வாபஸ் பெறப்பட்டிருப்பதை அவர்கள் ஆட்சேபிக்கின்றனர்.

### உள்நாட்டுச் சிக்கலாம்! தலையிடக் கூடாதாம்!!

லிஸ்பன், ஏப். 1—

போர்த்துகீசியர் வசம் இருக்கும் கோவாவில் கைது செய்யப்பட்ட கைத்தான்டே என்பவர் போர்த்துகீசிய குடிமகன் என்றும், அவர்மீது நடவடிக்கை எடுக்கத் தங்களுக்கு உரிமை உண்டென்றும் போர்த்துகீசிய சர்க்கார் தெரிவித்திருக்கின்றனர்.

இந்த விஷயத்தில் இந்திய சர்க்கார் தலையிடக்கூடாதென்று அவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

## பிரெஞ்சு ஆயுதப் போலீஸ் புறப்பட்டுவிட்டது

### இந்தியப் போலீசாருக்கு எச்சரிக்கை

புதுச்சேரி ஏப் 2—

"இந்திய எல்லைக்குள் பிரெஞ்சுப் போலீசார் எவ்விதத்திலும் நுழையாமல் பார்த்துக் கொள்ளும்படி எல்லையோரமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இந்திய விசேஷ போலீசார் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளனர்."

புதுவையின் எல்லைகளுக்கு 5 லாரிகள் நிறைய ஆயுதப் போலீசாரை பிரெஞ்சிந்திய அதிகாரிகள் அனுப்பியுள்ளனர். ஆனால், அவர்கள், திட்டமாக எங்கு அனுப்பப்படுகின்றனர் என்று தெரியவில்லை.

பிரெஞ்சிந்தியப் பகுதியின் நடுவில் தனியாக இருக்கும் நெட்டப்பாக்கத்துக்குள் கள்ளத்தனமாக பிரெஞ்சு ஆயுதப் போலீஸ் படைகள் செல்லக் கூடுமென ஒரு நம்பகமான வட்டாரம் கூறியது.

நெட்டப்பாக்கம் நிட்டுக்கு பிரெஞ்சு ஆயுதப் போலீஸ் வர முடியாதென்றும், அந்நிய ஆயுதப் போலீஸ் இந்திய பூமியில் கால் வைக்க அனுமதிக்கப் போவதில்லையெனவும், இந்திய சர்க்கார் பலமுறை வாக்களித்துள்ளதாக கூபேர் தெரிவித்தார்.

### போட்டி சர்க்கார்

14,000 பேர் மக்கள் தொகை கொண்ட நெட்டப்பாக்கம் கம்யூன்கள் அனைத்துக்கும் சோஷலிஸ்ட் தலைவர் கூபேர் தம் போட்டி சர்க்கார் அதிகாரத்தை விஸ்தரித்துள்ளார்.

புதுடில்லி ஏப் 1—

இந்திய நாட்டு எல்லைக்குள் நெட்டப்பாக்கத்திற்கெதிரே போலீஸ் நிறுத்தப்பட்டுள்ளதை வன்மையாக ஆட்சேபித்து பிரெஞ்சு சர்க்காருக்கு இந்திய சர்க்கார் குறிப்பு அனுப்புகிறது.

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 2—4—54 வெள்ளி


# அந்த ஒரு மணி நேரம்!

"தலைவர் தேர்தலில் போட்டியிட்ட நிதி மந்திரி சுப்பிரமணியம் இன்று காலை (மார்ச் 31) ராஜாஜியை அவரது இல்லத்தில் சந்தித்து, சுமார் ஒரு மணி நேரம் பேசிக்கொண்டிருந்தார்."

'சுதேசமித்திரன்' தந்த இந்தச் செய்தி, சென்னை மாகாணத்தின் எதிர்காலத்தை உருவாக்கவோ, உருக்குலைக்கவோ செய்யக்கூடிய சம்பவம் கருவில் உருவாகி வருகிறது என்பதையே காட்டுகிறது. மேதாவித்தனமல்ல, சாரசரி அரசியல் யூகம் போதும் இதை அறிய!

நிதி மந்திரியோ, தேர்தலில் போட்டியிட்டு அலுப்படைந்திருக்கிறார்; தோல்வி துளைத்திருக்கும் நேரம்; எனினும் ஒரு மணி நேரம் பேசிக்கொண்டிருந்திருக்கிறார், சிரமத்தையும் சலிப்பையும் பொருட்படுத்தாமல்!

அன்பர் ஆச்சாரியாரோ நிர்வாகச் சுமையைத் தாங்க முடியாதபடி நோய்வாய்ப்பட்டிருப்பவர் — அதனாலேயே ராஜிநாமாச் செய்திருக்கிறார்!!—எனினும், அவரும் ஒரு மணி நேரம் நிதி மந்திரியுடன் பேசிக்கொண்டிருந்திருக்கிறார்!

என்ன பேசினார்கள்? அவ்வளவு நீண்ட நேரம், இந்த நிலையில், நிர்வாகச் சுமையை இறக்கும் இருவர், பேசியது, கருத்தும் காரணமும் அற்றதாகவா இருக்க முடியும்—விளைவுகள் அற்ற மலடாகவா, அந்தச் சந்திப்புச் சம்பவம் போய்விடும்! நாம், நம்ப மறுக்கிறோம். அந்த ஒரு மணி நேரம், அடுத்த இரண்டு மூன்று ஆண்டுகளில் நடைபெறவேண்டிய அரசியல் காரியங்களைப் பற்றிய, திட்டம் வகுத்திடும், மாசறைப் பேச்சுக்குத்தான் உதவி இருக்கும் என்று கூறுகிறோம்.

காமராஜர் வாகை சூடினார்—வாரிசு என்று வர்ணிக்கப்பட்ட சுப்ரமணியம் தோற்றார்.

இவை அரசியல் சம்பவங்கள் — திராவிட மக்களுக்கு, இந்தச் சம்பவங்கள், புயலுமல்ல தென்றலுமல்ல; தேளுமல்ல. தேனுமல்ல; திராவிடர்கள் சிக்கிக் கொண்டிருக்கும் அடிமைத் தளையினின்றும் விடுபட நடந்தேறிவரும் விடுதலை இயக்கத்தின்போது நடைபெறும் காட்சி மாற்றங்கள். எனவே, நாம் எக்காளமிடவோ, ஏக்கம் கொள்ளவோ அவசியமில்லை; இந்தக் காட்சி மாற்றங்கள் காட்டும் பாடத்தைக் காணவும், கண்டதைக் கூறவும், அதேபோது நாம் நமது விடுதலைப் பயணத்தைத் தொடர்ந்து நடத்திச் செல்லவும் வேண்டியவர்கள். இந்தச் சம்பவம் குறித்து நாம் கூறிடும் கருத்துக்கள், பொதுப் பிரச்னையாக உள்ள ஜனநாயகத்தைப் பற்றிப் புரிந்துகொள்வதற்கு மட்டுமே பயன்படும்—அவ்வளவுக்குத்தான் பயன்படும்.

ஆச்சாரியார் விலகுகிறார்—விசாரப்படுவோர் இருக்கத்தான் செய்கிறார்கள்; 'விட்டது தொல்லை,' என்று மகிழ்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

பல்வேறு சமயங்களிலே, அரசியல் தலைவர்களுக்கு ஏற்படும் நெருக்கடியைத் தவிர்க்க 'நோய்' மாமருந்தாகிறது; ஆச்சாரியாரும் நோய்வாய்ப்பட்டிருக்கிறார். அந்த நோயோ, பதவி பாரத்தை இனித் தாங்க முடியாது என்று கூறி: உருகி, உருக வைத்து, ஆச்சாரியாரே, கட்சிக் கூட்டம், மேல் சபைக் கூட்டம், மந்திரி சபைக் கூட்டம், அதிகாரிகள் கூட்டம், கவர்னர் பெருமான் முன்பு, இவ்வளவு இடங்களிலும் பேச இடம் தந்திருக்கிறது. இவ்வளவும் போதாதென்று, நோய்வாய்ப்பட்டிருக்கும் அன்பரிடம் ஒரு மணி நேரம் பேசுகிறார் நிதி மந்திரியார்.

எவ்வளவுதான் 'குரு பக்தி' இருந்தாலும், இப்படியா! ஓய்வு கேட்கும் பெரியவரிடம் ஒரு மணி நேரம் பேசி, டாக்டர்களின் வெற்றியைக் கெடுப்பதா! சேச்சே! பதவி போகிறது—போனால் என்ன—அதற்காக ஒரு மணி நேரமா, அவரைக் கட்டிக்கொண்டு கோலவயார் அழுவது! பலமாகக் கண்டிக்கிறோம் இந்தப் போக்கை—ஆச்சாரியார் சார்பிலே—அவருடைய உடல் நலமின்மையைக் காரணம் காட்டி!

ஒரு மணி நேரம்! என்ன பேச்சு?

போட்டியிட்டது சரியா, தவறா? வாக்களித்தவர்களில் யாரார் தவறிவிட்டார்கள்? தூபமிட்டவர், காவடி தூக்கியவர், காலை வாரி விட்டவர், கண்ணில் படாமல் மறைந்தவர், கனைத்துக் காட்டியவர், கண்ணீர் சிந்தியவர், யார் யார்?

இந்தப் பிரச்னைகளைப் பற்றி இருவரும் பேசி இருக்கக் கூடும். அந்த ஒரு மணி நேரத்தில், இவை பற்றி மட்டுமே அவர்கள் பேசி இருந்தால், சரி; ஆனால், பேசப்பட்ட விஷயம் இவ்வளவுதானா? அதுதான் இல்லை!

எகிப்தை விட்டு விரட்டப்பட்ட பரூக், ஏறிச் சென்ற கப்பலிலே, என்ன பேசியிருப்பான், நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களிடம்!! ஆச்சாரியாரிடம், காமராஜரால் தோற்கடிக்கப்பட்ட சுப்ரமணியம், என்ன பேசியிருக்க முடியும்?

பேச்சின் துவக்கமே, 'தோற்றது யார், நானா, தாங்களா?'—என்றுதானே இருந்திருக்க முடியும்?

"போட்டியிட்டு, நமக்கு உள்ள ஆதரவு இவ்வளவுதான், ரூபாய்க்கு ஆறணா அளவுதான், என்று வெளிப்படையாக அனைவரும் அறியும் வண்ணம் காட்டிக் கொண்டது வெட்கமாகவும் இருக்கிறது, வேதனையாகவும் இருக்கிறது," என்று 'கனம்' குறையும் நிலையில் உள்ள சுப்ரமணியனார் கூறியிருப்பாரா! அவரும், அவரைப்போன்ற அளவு மட்டுமே அரசியல் அனுபவம் பெற்றவர்களும், அப்படித்தான் எண்ணிக் கொள்வர்.

'போட்டியைத் தவிர்க்க பெருமுயற்சி எடுத்துக் கொண்டேன்; இயலவில்லை'—என்று காமராஜரும் கவலையுடன் கூறுகிறார். காரணம், பலர், காமராஜர் உட்பட, காங்கிரசுக்குள் பேதம் இருக்கிறது, பிளவு இருக்கிறது என்பது வெளியாருக்கு, குறிப்பாக திராவிட இயக்கத்துக்குத் தெரியக்கூடாது—தெரியவிடக்கூடாது—ஒருவருக்கொருவர் வசை மொழி வீசிக் கொள்வதானாலும் மெல்லிய குரலில் பேசிக் கொண்டே, அது பிறர் செவியில் விழாமலிருக்க, உரத்த குரலில், 'ஜெய் இந்த்! வந்தே மாதரம்!!' போட வேண்டும், அதுதான் ராஜதந்திரம் என்று கருதுகிறார்கள்.

இந்த ரசமற்ற ராஜதந்திரப் போக்கினாலேயே, இப்போது நடைபெற்ற 'விலகல்'—தூற்றல், விக்கல், விம்மல் எனும் பல கட்டங்களுக்குப் பிறகு நடந்தேறியது.

இது ராஜதந்திரமாகவோ, கட்சிக் கட்டுப்பாட்டைக் காக்கும் செயல் முறையாகவோ, இருக்கக் கூடும்; ஆனால், நிச்சயமாக இது ஜனநாயகமாகாது.

தனிப்பட்டவர்களின் தன்மானப் பிரச்னை என்ற அளவிலே இதைக் கவனிப்பதானால், எப்போதோ, ஆச்சாரியார், கட்சிக்குள்ளேயே வெறுப்போரும், வெகுண்டுரைப்போரும், வேண்டாமென்று கூறுவோரும் கிளம்பினார்களோ, அப்போதே விலகி இருக்க வேண்டும். நெடுங்காலமாகவே அவர் திடகாத்திரமாக இருந்தவருமல்ல!! இவ்வளவு 'விளைவுகளை'த் தாண்டி பிரிவுபசாரம் பெற்றிருக்க வேண்டியதில்லை சற்றேனும் ஏறுமாறாக இருப்பாராகில கூறுமன் சன்யாசம் கொள்வாராம், சாமான்யர்கள்! இவரோ, நாடு முழுவதும் நாற்றமடிக்குமளவு பிரச்னை பண்ணின பிறகே—காவி எங்கே, கமண்டலம் யாரிடம்—என்று கேட்டார்; சரியல்ல!

ஜனநாயகத்தை மட்டுமே பிரச்னையாகக் கொண்டு பார்ப்பதானாலும், கட்சிக்குள்ளே, புதிய கல்வித் திட்ட சம்பந்தமாக ஏற்பட்ட கருத்து வேற்றுமை, ஒளிவுமறைவின்றி தெரிந்த உடனே, ஆச்சாரியார் விலகி இருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் ஜனநாயகத்துக்குக் கிடைக்க வேண்டிய மாண்பு கிடைத்திருக்கும்.

கடைசியாக, நிதி மந்திரியாருக்கு, இந்தக் கதி—98 - 41—ஏற்பட இடம் இல்லாமல் செய்திருந்தால், அரசியல் நாகரிகம் விளங்கியிருக்கும்; அவ்விதம் இல்லை. போட்டியிட்டுத் தோற்றிடும் நிலையை உண்டாக்கி விட்டார்கள். பரிதாபம்! ஸ்ரீராமச்சந்திரர், அனுமனுக்கு இவ்விதமான இழிவு ஏற்பட, விடவே இல்லை!!

சம்பவம் இவ்வளவுடன் முடிந்தது என்று இனியாவது இருப்பார்களா என்று எண்ணிடும்போது தான், அந்த ஒரு மணி நேரம் நினைவிற்கு வருகிறது.

ஐந்தாறு திங்களுக்கு முன்பே புள்ளி விவரம் பேசிற்று—ஆச்சாரியார் சார்பில் அல்ல—அவருக்கு எதிராக! அதற்குப் பிறகு, ஆச்சாரியார் தமது பேச்சாலும், செயலாலும் மேலும் சிலரை எதிரிகளாக்கிக் கொண்டிருக்கிறாரே தவிர, தழுவச் சென்றதில்லை. நிலைமை இவ்வாறிருக்க, ஏன், தமது வார்த்தைக்குக் கட்டுப்பட்டு நடக்கக்கூடிய பரம பக்தரான சுப்ரமணியத்தைப் போட்டியிடச் சொன்னார்? அதிலேதான் சூட்சமம் நிச்சயமாக இருக்கிறது—அதன் தொடர் பேச்சே ஒரு மணி நேரம் நடைபெற்றிருக்க வேண்டும்.

இல்லை, இல்லை — என்று பலமாக முழக்கமிடுவர் ஆச்சாரியார் வட்டாரத்தினர்.

இருந்தாலும், மறப்போம், ஒன்றுபடுவோம், உங்களுக்குத் துளியும் இடமளிக்கமாட்டோம் என்று கர்ஜனை புரிவர், காமராஜர் கூடாரத்தினர். அறிவோம். பழைய முறைதான் அது! பயனற்றதுங்கூட!!

போட்டியிட்டதால், ஒரு பலன், கிடைத்திருக்கிறது. நாற்பத்தொருவர், ஆச்சாரியார் இருக்கும் திசை நோக்கித் தெண்டனிடும் திருத் தொண்டர்களாக உள்ளனர்—தோல்வி தாக்கும் என்று தெரிந்தும்! இந்த சொந்தப் படையின் அளவு காணவே, போட்டி நடைபெற்றது.

இந்தப் 'படை,' காமராஜர் அமைக்கும் அமைச்சர் குழுவின் மீது பாய சக்தி பெறுவதிலும், சமயம் கண்டறிவதிலும், ஈடுபடும்—அமைச்சர் குழுவில், காமராஜர் இருந்தாலும் இல்லாமற் போயினும்! எப்படி, எப்போது, தலைவனை,—ஒரு மணி நேரம் போதாதா, திட்டத்தை ஓரளவுக்குத் திட்ட!

நகிப-நாசர் பூசல், பூன்பு முசாதிக்-காஷானி கசப்பு, இவைகளை எல்லாம படித்தவர்கள்தானே, காங்கிரசாரும்! முறை மாறுபடும், நிச்சயமாக, ஆனால் நிலைமை, வேறாகவா போகும்!

நிலைமை, சரியாகும் என்பதிலே 'சுதேசமித்திரனு'க்கே நம்பிக்கை இல்லை—விருப்பமும் இருப்பதாகத் தெரியவில்லை—'மித்திரன்' எழுதுகிறது:—

> "பிளவு காட்டிய கட்சியில் ஒற்றுமை நிலைக்குமா?"
>
> "சட்டசபை பிரதிபலிக்கும் நிலைமை எந்த அளவுக்கு இந்த ராஜ்யத்தின் நிலைமையைக் காட்டுகிறது?"
>
> "அதைச் சோதிக்க வேண்டிய நிர்ப்பந்தம் அதிக நாள் தவிர்க்க முடியாதென்று அஞ்சுகிறோம்."

இந்த மும்மணிகள் கக்கும் கருத்தைக் கவனிப்போருக்கு, எதிர்காலக் காட்சிகள் புகைப்படல அளவுக்கு நிச்சயம் தெரியும்.

கட்சியிலே பிளவு—பிளவு மறைந்துமில்லை, வெளியே தெரிந்துவிட்டது — இனி ஒற்றுமை ஏற்படுமா?—என்று 'மித்திரன்' கேட்கிறது.

ஆச்சாரியாரின் 'விலகல்' சட்டம், 'மித்திரனு'க்கும், 'இந்து'வுக்கும், 'தினமணி'க்கும், மறக்கக் கூடியதாகவோ, சகித்துக்கொள்ளக் கூடியதாகவோ இருக்க முடியாது. 'கல்கி'யின் கண்ணீரைக் காவிரியாக்கலாம்!! அவர்கள், 'மகான் வந்தார்!' என்று உள்ளம் பூரித்து வரவேற்றனர்; வாழ்த்தினர்; இப்போது நடைபெற்ற நிகழ்ச்சி அவர்களுக்கு, இராவண சம்ஹாரத்துக்குப் பிறகு இரவிகுலச் சோமன், அயோத்தி வந்தபோது, அரசு, பரதனுக்கே என்று தீர்மானம் ஆவது போலத்தான் தோன்றும். தழும்பு எளிதிலே மறைந்துவிடக் கூடியதல்ல.

கவிழ இருந்த காங்கிரசைக் காப்பாற்றினார்.

திக்குத் தெரியாத காட்டில் 'இதுகள்' எல்லாம் திரிந்து கொண்டிருந்தபோது, 'கோதண்டம்' எடுத்தார்.

நாற்றமடித்துக் கொண்டிருந்த கொட்டிலில் பன்னீர் கொண்டு சுத்தம் செய்தார்.

அப்படிப்பட்டவரை! இதுகள்!!—என்று எண்ணும்போதே, பாபம், அவர்களுக்கு கேகயகுமாரி காலில் வீழ்ந்த தசரதன் நிலைபோலத்தானே இருக்கும்!

'சுதேசமித்திரன்' செப்புகிறதே—சட்ட சபையினர் வேண்டாமென்று கூறிவிட்டால் என்னய்யா! மகாஜனங்கள் இருக்கிறார்கள், மகாஜனங்களை!—என்று.

சோதிக்கலாம்—விரைவில்—என்று மிரட்டவும் செய்கிறது.

ஆச்சாரியாரின் அடிவருடிகளாக இருக்கும் வரையில, சட்டசபை உறுப்பினர்கள், மகாஜனங்களின் பிரதிநிதிகள்—ஆச்சாரியார் வேண்டாம் என்றதும், அதே உறுப்பினர்கள், நீக்கப்பட வேண்டியவர்கள்!!—இது 'மித்திரன் கோஷ்டி'யினரின் அரசியல் தத்துவம்!

இந்தத் தத்துவத்தை, கோபம் தாளாத நிலையில், இவ்வளவு விரைவில், புது மந்திரிகள் யாரார், என்பதையோ, என்ன செய்வர் என்பதையோ அறிந்துகொள்ள முடியாத நிலையிலேயே, கொட்டிக்காட்டுகிறது, இந்த ஏடு, என்றால், புதுக்குழு பதவியில் அமர்ந்ததும், எப்படிப்பட்ட பகை கக்கப்படும், என்பதை யூகித்துக் கொள்ளலாம்.

போட்டியின்றி, புதுத் தலைவர் கிடைத்திருந்தால், இந்த பொன்னான வாய்ப்பு, இவர்கட்குக் கிட்டுமா! எனவேதான், சூட்சமம் தெரிந்த சூத்திரதாரிகள், போட்டியை நடத்தினர். தோல்வி, அவர்களை எதிரியைத் தாக்கித் தாக்குவதைவிட, மறைந்திருந்து தாக்கும் போக்குக்குக் கொண்டு செல்லும் — சும்மாவா இராமாயணம் படிக்கிறார்கள் — ஐயன், வாலியைக் கொன்றது மரத்தின் பின்புறமிருந்துதானே!

ஆச்சாரியாரை 'விலக' வைத்தது, அழகல்ல, அறமாகாது—என்று பேசமாட்டார்கள்; புதிய மந்திரி சபை அமைந்ததும், சின்னாட்களிலே கணைகள் கிளம்பும்—'காங்கிரசின் செல்வாக்கு சிதைகிறது, நிர்வாகம் மோசமாகிறது,'—என்ற முறையில்!

(8-ம் பக்கம் பார்க்க)

# சென்னை நகரில் மின்சார சப்ளை விஸ்தரிப்பு

## ரூ. 14 கோடி அமெரிக்க உதவி

### உடன்படிக்கை கையெழுத்தாகிவிட்டது

புதுடில்லி, மார்ச் 31—

சென்னை நகரத்தில் மின்சார உற்பத்தி செய்யும் இயந்திர நிலையங்களை ஏற்படுத்தும் திட்டத்தை நிறைவேற்ற அமெரிக்க சர்க்கார் இந்தியாவுக்குச் சுமார் ரூ. 14 கோடி தந்து உதவும்.

இந்த உதவி சம்பந்தமான உடன்படிக்கையில் அமெரிக்க சர்க்காரும், இந்திய சர்க்காரும் கையொப்பமிட்டுவிட்டனர்.

இந்தக் கூட்டுத் திட்டத்திற்கு அமெரிக்க சர்க்கார் தருவது 29 லட்சம் டாலர்—அதாவது, ரூ. 14 கோடியாகும். இந்திய சர்க்கார் ரூ 2.92 கோடி கொடுக்கும்.

இந்தத் திட்டம் இன்னும் 3 ஆண்டுகளில் நிறைவேற்றப்படும். தற்பொழுது சென்னை நகரில் சப்ளையாகும் மின்சார சக்தி உற்பத்தி பெருக்கப்படும்—அதாவது, 30 000 கிலோவாட் மின்சார சக்தி அதிகமாக சப்ளை செய்யப்படும்.

சென்னை நகரத்தில் தற்பொழுது மின்சார சப்ளைக்கு மிகவும் கிராக்கி இருக்கிறது; புதிய திட்டத்தின் மூலமாக புதிய தெர்மல் ஸ்டேஷன்கள் ஏற்படும். கோடை காலத்தில் ஜலதாரை திட்டத்தின் மூலமாகக் கிடைக்கும் மின்சார சப்ளையில் ஏற்பட்டுவருகிற பற்றாக்குறை இந்தப் புதிய திட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் நீங்கிவிடும்.

## துணிகள் முடக்கம்!

### பாகிஸ்தானில் நடவடிக்கை

கராச்சி, மார்ச் 31—

இறக்குமதியாளர்கள் வசமுள்ள இறக்குமதி செய்யப்பட்டுள்ள எல்லாத் துணி இருப்பையும், வியாபாரிகளிடம் ஆயிரம் கெஜத்திற்கு மேற்பட்டிருக்கும் இருப்பையும் முடக்கியிருப்பதாக பாகிஸ்தான் துணி கமிஷனர் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

## நாகர் சாதுக்களின் நிர்வாண ஊர்வலம் இந்து தர்மத்திற்கு மாறானதாம்

### அத்தகைய ஊர்வலங்களை அடியோடு தடுக்க மதவாதியின் யோசனை

அலகாபாத், மார்ச் 31—

“நாகர்கள் பின்பற்றுவது போல நிர்வாணமாக சஞ்சரிப்பதை சாஸ்திரங்கள் ஆதரிக்கவில்லை: யானைகள், கார்கள் முதலிய ஆர்பாட்டங்களுடன் ஊர்வலம் செல்வது என்பது சமூக, தார்மீக, மதக் கோட்பாடுகளுக்கு முரணானது,” என்று, இன்று கும்பமேளா கோர சம்பவ விசாரணைக் கமிட்டியில் சாட்சியமளிக்கையில், மாளா கலிகாம் பிவாலி டிரஸ்டின் கௌரவக் காரியதரிசி ஸ்ரீ தத்த சீதாராமன் தெரிவித்தார்.

“இது என்னுடைய அபிப்பிராயம் மட்டுமல்ல; இவ்விஷயமாகப்பிரபல சனாதன தர்மத் தலைவர் சுவாமி கரபாத்ரஜியைப் போன்றவர்களையும், நான் கலந்தாலோசித்திருக்கிறேன். அவருடைய அபிப்பிராயமும் இதுவே” என்று அவர் மேலும் கூறினார்.

“வழக்கமாக ஆடை உடுத்துபவர்கள், கும்பமேளா போன்ற சமயங்களில் நிர்வாணமாகப் பவனி கிளம்புவது அசம்பாவிதம்,” என்று எழுத்துப்பட்ட சுவாமி கர்போத்ரிபாஜா அபிப்பிராயம் தெரிவித்து எழுதிய கடிதத்தையும் சாட்சி கமிட்டிமுன்பு படித்துக் காட்டினார்.

கும்பமேளாக்களில் சாதுக்களின் ஊர்வலங்களுக்கு அடியோடு தடை விதிக்க வேண்டுமென்பது தம் கருத்தெனவும் அவர் கூறினார்.

## அணைக்கட்டு திட்டத்திலும் திராவிடத்திற்கு அநீதியா?

—( : )—

### கல்லுக்குழி தி. மு. கழக துவக்க விழா பொதுக்கூட்டத்தில் இரா. நெடுஞ்செழியன் பேச்சு

28—3—54 மாலை கல்லுக்குழி மைதானத்தில் தி. மு. கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் தோழர் மு. ரெத்தினம் தலைமையில் நடைபெற்றது. செயலாளரின் வரவேற்பு உரைக்குப் பின், தோழர்கள் எம். என். மணி, என். நெடுமாறன் சொற்பொழிவாற்றினர்.

பின்னர் தோழர் இரா. நெடுஞ்செழியன் துவக்கவிழா சொற்பொழிவாற்றுகையில், திராவிடம் பிரிய வேண்டிய அவசியத்தை இலக்கிய சான்று காட்டியும் பொருளாதார புள்ளி விவரங்கள் தந்தும், மிகமிகக் குறைந்த மக்களுடைய நாடுகளெல்லாம் தனியரசாக வாழுகிற நிலையோடு, 7¾ கோடி மக்கள் வாழுகின்ற, வளம் நிறைந்த திராவிடத்தில் வாழுகிற வாய்ப்பில்லாத நிலையை ஒப்பிட்டும் வலியுறுத்தினார்.

வடக்கே கட்டப்பட்டுவரும் தாமோதர் அணைக்கட்டுக்கு ரூ. 139 கோடி செலவு—ஆனால், திராவிடத்திலுள்ள பவானி அணைக்கட்டுக்கு ரூ 9 கோடிதான் செலவு; மற்றும் மலம்புழா போன்ற அணைக்கட்டுகளுக்கு சுமார் 1 கோடி செலவு—ஏன், இந்தக் குறுகிய மனப்பான்மை? யார் காரணம் இது?—என்று கேட்டார்.

புதிய கல்வித் திட்ட கூறுபாடுகளை விளக்கி, அதனால் திராவிட சமுதாயத்திற்கு நேருகிற கேடுகளைக் குறிப்பிட்டார்.

கம்யூனிஸ்டுகள் கன்னடம், தமிழகம், ஆந்திரம், கேரளம் அடங்கிய கூட்டாட்சி திராவிடத்தை, ‘கற்பனை’ என்று கூறுவதையும், அதேபோது, ஐக்கிய தமிழகம், விசால ஆந்திரம், சம்யுக்த கன்னடம். ஐக்ய கேரளம் அமைவதைப் பிரத்தியட்ச பிரமாணம் என்று கம்யூனிஸ்டுகள் கூறுவதில் உள்ள பொருத்தமற்ற வாதத்தை விளக்கினார்.

## பெஷாவர் நகருக்கு அமெரிக்க மேயர்!

—:o:—

### போர்ட்லாண்டு நகரத்திற்கு பாகிஸ்தான் ஆணையாளர்!

லாகூர், மார்ச் 31—

அமெரிக்காவில் உள்ள போர்ட்லாண்டு நகராட்சி மன்றத்தின் மேயரான டாக்டர் ராபர்ட் செர் என்பவர், வ. மே. எல்லைப்புற மாநிலத்தில் உள்ள பெஷாவர் நகராட்சி மன்றத்தின் மேயராக நியமிக்கப்பட்டுள்ளார். அதுபோன்றே பெஷாவரின் நகராட்சி ஆணையாளராக உள்ளவர், 15 தினங்களுக்குக் குறையாமல் போர்ட்லாண்டு நகராட்சியின் நிர்வாகத்தைக் கண்காணித்து வருவார்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

முதல் கணையை ‘மித்திரன்’ தொடுத்தே விட்டது.

“விலகும் போது ராஜாஜி காங்கிரசின் செல்வாக்கை காக்க முயன்றார். பலிக்கவில்லை!”

புரிகிறதா! செல்வாக்கு காக்கப்படவில்லை — சரிகிறது! இது, துவக்கம்; போர் முறை பற்றிப் பேசி முடிக்க ஒரு மணி நேரமா, போதாது; அதிலும் இராமாயண பாராயணம் செய்து, அரிய முறைகளை ஐயந்திரிபற அறிந்து கொண்டவர்களுக்கு, ஒரு மணி நேரமா, போதாது!

பெரிய இடத்து விவகாரம்; சாமான்யர் பளரம், நமக்கென்ன அவதட்பற்றி என்று இருந்து விடலாம்; ஆனால், அவர்களின் செயல், நாட்டைப் பாதிக்கக் கூடியதல்லவா? எனவேதான், அதுபற்றி அறிந்துகொள்ள அவா! வேறில்லை!!

# தஞ்சை மாவட்ட இரண்டாவது தி. மு. கழக சமூக சீர்திருத்த, அரசியல் மாநாடுகள்

★

ஏப்ரல் 10, 11-ந் தேதிகளில் தஞ்சையில் முத்தமிழ் வள்ளல் அருளானந்தசாமி நாடார் தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள பன்னீர் செல்வம் பந்தலில் இரு மாநாடுகளும் நடைபெறும்.

மேடைக்கு, தஞ்சை தந்த மாவீரன் மறைந்த அழகிரியின் பெயரிடப்பட்டிருக்கிறது. மாநாட்டுப் பந்தல் 350×200 அளவுக்கு ஏறத்தாழ 30,000 மக்கள் கொள்ளும்படி அமைக்கப்பட்டிருக்கிறது.

மாநாட்டு முகப்பில் மறைந்த வீரர் பன்னீர்செல்வம் திருவுருவப் படம் ஏழடி உயரத்தில் மாலு சகோதரர்களால் வரையப்பட்டு வரும் பிரதிநிதிகளை வரவேற்கும்.

தென் பகுதி ரயில்வே நிர்வாகிகள், கடலூர், திருச்சி, நாகூர் ஆன மூன்று ஊர்களிலிருந்தும் புறப்படும் வண்டிகளில் மாநாட்டு நிகழ்ச்சி நாட்களில் அதிக பெட்டிகள் இணைப்பதாக உறுதி தந்துள்ளனர்

மாநாட்டுப் பந்தலில் ஒரு தனி அஞ்சல் நிலையம் அமைக்க தபால் இலாக்காவினர் இசைந்து ஏற்பாடுகள் செய்துவிட்டனர்.

மின்சார அலங்காரங்களும் ஒலி பெருக்கிகளும் திருச்சி தோழர் ராபி உயர்ந்த முறையில் அமைத்துத் தரும் பொறுப்பை ஒத்துக் கொண்டிருக்கிறார்.

உணவு டிக்கட்டுகள் மாநாட்டுப் பந்தலில் ஐந்து வேளைகளுக்கு ரூ. 2—8—0 கொடுத்தால் கிடைக்கும். விருதுநகரிலிருந்து சமையலுக்கும், பரிமாறவும் ஆட்கள் வருகின்றனர். உணவு ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கைக்கே தயாரிக்க முடியுமாதலால் உடனடியாக டிக்கட்டுகளை வாங்கிக்கொள்ள வேண்டுகிறோம்.

மாநாடுகளுக்கு வரவேற்புக் குழு உறுப்பினர்கள் டிக்கட் ரூபாய் ஐந்தும், பிரதிநிதிகளுக்கு ரூபாய் இரண்டும், பார்வையாளருக்கு ரூபாய் ஒன்றும் ஆக குறிக்கப்பட்டுள்ளது. பெண்களுக்குத் தனி இடமும், கட்டணமாக எட்டணாவும் விதிக்கப்பட்டிருக்கிறது.

வருவோர் அனைவரும் குளிக்கவும், தங்கவும் வசதிகள் செய்யப்பட்டிருக்கிறது.

சைக்கிளில் வருபவர்கள் சைக்கிள்களை வைத்துக்கொள்ள 0—1—0 அணா கொடுத்து ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

மாநாட்டுத் தீர்மானங்களை ஏப்ரல் 3-ந் தேதிக்குள் அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

தஞ்சை மாவட்டத்திலிருந்து தி. மு. கழகப் போராட்டங்களில் கலந்து கொண்ட தோழர்களின் பெயரையும், விலாசத்தையும் மதிப்புக்குரிய விதமாக எல்லோரும் பார்க்கும் இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

தஞ்சை புகை வண்டி நிலையத்திலிருந்து மாநாட்டுப் பந்தல் வரை தோரணங்களும், வளைவுகளும், வருபவரை வாழ்த்தி வரவேற்கும் விதம் அமைக்கப்பட்டிருக்கிறது.

போர்ப் பரணி பாடும் பெரியோரே! பெற்ற தாய்மாரே! கல்விளஞ் சிங்கங்காள்! நம்மை நோக்கி நிற்கும் பயங்கரமான பிரச்னைகளை சமாளிக்க வேண்டிய நேரம் இது. இந்திய உபகண்டத்தின் எல்லைக்கோட்டில் முதலாளித்துவ ஏகாதிபத்தியம் அமெரிக்கா நம்மை விழுங்க முயற்சிக்கிறது. தாயின் முகத்திலே காணப்படும் பருக்களைப்போல நம் நாட்டின் அழகை பிரெஞ்சு, டச்சு, ஏகாதிபத்தியங்கள் அவலட்சணமாக்குகின்றன. புதுச்சேரி, காரைக்காலில் உரிமை வீரர்கள் போர் முரசு கொட்டுகின்றனர்.

நம் இனத்தின் நல்வாழ்வை அழித்து நாசஞ் செய்யும் ஆச்சாரியார் கல்வித் திட்டம் முனிசிபல் எல்லைகளிலும் தலைகாட்டப் பார்க்கிறது. கலங்கிக் கண்ணீர் வடிக்கும் ஏழை விவசாயிகள்—இல்லாத கொடுமையினால் எலும்பொடியப் பாடுபடும் தொழிலாளர்கள்—வேலையிழந்து தவிக்கும் ஆசிரியர்கள்—அரை வயிற்றுக் கஞ்சிக்கும் போதவில்லையே என அலறும் அரசாங்க அலுவலர்கள்—எங்கு பார்த்தாலும் அழுகைக் குரல்; அவல நிலை!

தூத்துக்குடி சிறைகளிலே துடிக்கின்றனர் நம் தோழர்கள்! போராட்டங்களுக்குப் பிறகு நம் தலைவர்களும், முன்னணி வீரர்களும் முதன் முறையாகக் கூடுகின்றனர் தஞ்சைத் தரணியில்! அருமையான நெசவாளருக்கு ஆதரவு தரத் திட்டம் வகுத்த தஞ்சை—புயலால் பாழானவர்களுக்கு செயலால் உதவி செய்யத் துணிந்து வெற்றிபெற்ற தஞ்சை—இருள் நிறைந்த இந்த நேரத்தில் ஒளி பரவத் திட்டம் வகுக்கப்போகிறது.

கண்ணீர்த் துளிகளே! கண்ணியத்தின் சின்னங்களே! கட்டுப்பாடு நிறை ஏந்தல்களே! வாரீர்! ஆண்களும், பெண்களும் அணி வகுத்து வாரீர்! தஞ்சைத் தரணி அழைக்கிறது! பன்னீர்ச் செல்வம், பந்தல் முகப்பிலிருந்து அழைக்கிறார்! அழகிரி இதயத்துள்ளிருந்து இன் முகத்தோடு கூப்பிடுகிறார்!

வாரீர், திரண்டு, தீரரே, தஞ்சை நோக்கி!

## நெடுஞ்செழியன் மன்றம்

மதுரை, மார்ச் 29—

28—3—54 இரவு 10 மணியளவில் மன்ற உறுப்பினர் கூட்டம் தோழர் பேச்சிமுத்து தலைமையில் நடைபெற்றபோது, உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

செயலாளர்: சுப. இராமநாதன்; பொருளாளர்: கே. பாண்டியன்; நகர் கழகப் பிரதிநிதி: மு. சௌந்திரபாண்டியன்; செயற்குழு உறுப்பினர்: தனுஷ்கோடி. மன்றத்தின் ஆண்டு விழாவை மே முதல் வாரத்தில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

தோழர்கள் வி. வி. தனுஷ்கோடி, என் ஏ முத்து, நெடும்பலம் சாமியப்பா, பாகனேரி உடையப்பா ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

## மஜீத் மன்றம்

சென்னை, மார்ச் 24—

சென்னை 12-வது வட்டம் மஜீத் மன்றத்தில் 21—3—54 காலை 10 மணியளவில் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, இவ்வாண்டிற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்: செயலாளர்: தோழர் பா. தம்பித்துரை; துணைச் செயலாளர்—பொருளாளர்: தோழர் முத்துமுனுசாமி; கமிட்டிக் குழு உறுப்பினர்கள்: தோழர்கள் எழிலன், கே. எம். ஏ. ரசாக், தங்கமணி, ஆனந்தபாணி, வி. ஆறுமுகம்.

## ஆச்சாரியார் கல்வித் திட்டம்

சென்னை, மார்ச் 30—

ஆச்சாரியாரின் ஆரம்பக் கல்வி திட்டம் குறித்து மே. 10-ந் தேதிக்குப் பிறகு ஆந்திர மந்திரி சபையில் முடிவாகப் பரிசீலனை செய்யப்பட விருக்கிறது.

## காங்கிரஸ் வெற்றி...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

யில் காங்கிரஸ் கட்சி ஆதரவாளர்களுக்கு சலுகைக் காட்டவே இம் முயற்சி.

திட்டமிடப்பட்டிருக்கும் செலவிற்கு விவரம் கூறாமல் மறைத்து விட்டதோடு, அத்தொகையைச் செலவிடும் உரிமையை மாவட்ட சர்க்கார் நிர்வாக நிலையங்களிடமிருந்து மந்திரிகளே தங்களுக்கு நேரடியாக மாற்றிக் கொண்டு விட்டனர். இப்போக்கு தங்களுடைய இலாக்காக்களுக்கு எந்தவிதத் தொடர்பும் இல்லாமலிருந்தாலும், தனிப்பட்டவர்கள் தம்மிஷ்டப்படி இத்தொகையை செலவழிக்கலாம் என்ற கருத்துக்கு ஆதரவு அளிப்பதாக இருக்கிறது. அதுவுமல்லாமல், அப்படி செலவழிக்கப்படும் விவரமும் பொது மக்கள் கண்களுக்குப் படாமலும், சட்ட சபைக்குப் புகாமலும் போய்விடும். இது பொது மக்களுடையவும், அவர்களின் பிரதிநிதிகளுடையவும் உரிமையை மறுப்பதாகும்.

இதற்கு, தேவையான விவரம் கூறாமல் செலவுத் தொகைக்கு ஒப்புதல் பெற்றுள்ளது, அரசியல் சட்டத்தில் உள்ள 202, 203 விதிகளுக்கு முரண்பட்டுள்ளதோடு, சட்ட சபை நடைமுறை விதிகளுக்கும் மாறுபட்டதாகும்.

வரவு—செலவு திட்டத்தின் நோக்கமோ, கூடுமான வரை செலவினங்களுக்கான தேவையுள்ள விவரத்தைக் கூறி, சபையில் சமர்ப்பிப்பதாகும். நிரந்தரமான நிர்வாக இயந்திரம் செலவழிக்கப்படுவதற்குப் பதிலாக அமைச்சர்களும், துணை அமைச்சர்களும் குறிப்பிட்ட விவகாரத்திற்காக செலவழிப்பார்களென தெளிவில்லாது கூறுவது சட்ட நோக்கத்திற்கு ஒத்தும் போவதாகாது.

## விநயகம் குழுவினர்மீது வழக்கு

அரக்கோணம், மார்ச் 31—

26—9—53-ல் திருத்தணியில் நடந்த தி. மு. கழகப் பொதுக் கூட்டத்தில் கழகத் தோழர் களைத் தாக்கியதாகவும், தோழர் ஏ. எல். சி. கிருட்டிணசாமியின் காரைச் சேதப்படுத்தியதாகவும், திருத்தணி பஞ்சாயத்து போர்டு உபதலைவர் உள்பட விநயகம் குழுவைச் சேர்ந்த அறுவர் மீது திருத்தணி போலீசாரால் தொடுத்த வழக்கு 30—3—54ம் தேதி, சப்டிவிஷனல் முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

குற்றஞ்சாட்டப்பட்ட 3-வது எதிரியான எம் வெங்கடேசன் (பஞ்சாயத்து உபதலைவர்) கோர்ட்டிற்கு வராததால், அவரை உடனே கைது செய்து ரிமாண்டில் வைத்து 6-ந் தேதி ஆஜர்படுத்த வேண்டுமென்று அந்த போலீசாருக்கு உத்திரவு அளித்தார்.

வழக்கு 6—4—54க்கு ஒத்தி வைக்கப்பட்டது.

## ரயில் பெட்டியில் வெடி விபத்து

கோரக்பூர், ஏப். 1—

வடகிழக்குப் பகுதி ரயில்வேயில் கோரக்பூருக்கு 6 மைல் மேற்கேயுள்ள ஜகதேல ஸ்டேஷனில் நேற்றிரவு 8-33 மணிக்கு கதிஹார்—கான்பூர் எக்ஸ்பிரஸ் ரயிலில் 3-வது வகுப்புப் பெட்டியொன்றில் பயங்கரமான வெடி விபத்து ஏற்பட்டதில் 31 பேர் உயிரிழந்தனர் என்றும், 35 பேர் காயமடைந்தனர் என்றும் தெரிய வருகிறது.

## கழகக் கூட்டங்கள்

★

### சென்னை

தூத்துக்குடி வழக்கு நிதியளிப்பு விழா

4—4—54 மாலை 6 மணிக்கு

இடம்: ஓட்டேரி மங்களபுரி, கிருஷ்ணதாஸ் ரோட்டிலிருக்கும் மைதானத்தில் (B & C. மில்ஸ் காண்டீன் பின்புறம்)

தலைவர்: எம். மூர்த்தி

பேசுபவர்:

சி. என். அண்ணாதுரை

—தி. மு. க. 19-வது வட்டம்

★

### சென்னை

(கொடுங்கையூர்)

4—4—54 மாலை 6 மணிக்கு

இடம்: மூல கடை

தலைவர்: இன்பராசன்

பேசுவோர்:

டி. வி. நாராயணசாமி
முகவை ஆர் எஸ். பாண்டியன்
வி. எஸ். கோவிந்தராசன்

★

### நாகப்பட்டினம்

தி. மா. மு. கழக சிறப்புக் கூட்டம்

4—4—54 மாலை 6 மணிக்கு

இடம்: அவுரித் திடல்

பேசுவோர்:

மு. கருணாநிதி
என். வி. நடராசன்

★

### கோவில்பட்டி

4—4—54 இரவு 7 மணிக்கு

இடம்: கோவில்மேடு

தலைவர்:

ஈ. வே. அ. வள்ளிமுத்து

பேசுபவர்:

டபிள்யூ. டி துரைசாமி
அலிசேக் மன்சூர்
எம். ஆர். கணேசன்
எம். ரத்தினம்

★

### இராமநாதபுரம்

4—4—54 மாலை 6½ மணிக்கு

இடம்: சந்தைப்பேட்டை திடல்

தலைவர்: சா. பரசு

பேசுவோர்:

சிற்றுளி சுப்ரமணியம்
மு. பாண்டியன்

★

### சோழவந்தான்

5—4—54 திங்கள் மாலை

இடம்: வைகையாற்றுத் திடல்

பேசுவோர்:

இரா. நெடுஞ்செழியன்
எஸ். முத்து

★

### அய்யம்பேட்டை

6—4—54 மாலை 5 மணிக்கு

இடம்:

சினிமா கொட்டகை மைதானம்

தலைவர்: எஸ். ஆறுமுகம்

பேசுபவர்:

இரா. நெடுஞ்செழியன்

★

### எடமேலையூர்

6—4—54 செவ்வாய் மாலை

பேசுபவர்:

சி. பி. சிற்றரசு

## நடக்க இருப்பவை

★

### பொன்மலை மேலக்கற்கண்டார்கோட்டை தி.மு.க. உறுப்பினர்கட்கு

'4-4-54 காலை 10 மணிக்கு பொன்மலை, மேலக்கற்கண்டார்கோட்டை (கிளை) தி. மு. கழக உறுப்பினர் கூட்டம் கழகக் கட்டிடத்தில் நடைபெறும். அதுசமயம் கழகத்தின் சார்பாக மே மாதம் ஒரு பொதுக்கூட்டம் நடத்துவது பற்றியும், கழகத்துக்கு சொந்தமாக கட்டிடம் வாங்குவதற்கு பொருள் திரட்டுவது பற்றியும், மற்ற கழக சம்பந்தமான விஷயங்கள் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். எல்லா உறுப்பினர்களும் அவசியம் கலந்துகொள்ளுமாறு வேண்டுகிறேன்,'' என செயலாளர் ஏ. சுந்தரம் அறிவிக்கிறார்.

### வட ஆற்காடு மாவட்ட தி.மு.க. பிரதிநிதிகளுக்கு

★

"4-4-54 பகல் 1 மணிக்கு, மாவட்ட செயற் குழுக் கூட்டம் களம்பூர் (ஆரணி ரோட்) தோழர் எஸ். எம். அண்ணாமலை இல்லத்தில் நடைபெறும். மாவட்டப் பிரதிநிதிகள் இதனையே அழைப்பாகக்கொண்டு கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுகின்றேன், ஆண்டுக் கட்டண தொகையை உடன் கொண்டுவரும்படி வேண்டுகின்றேன். திருச்சி பொதுக்குழு தீர்மான விளக்கம், களம்பூர் விவசாயிகள்பிரச்னை, மாவட்ட மாநாடு, மற்ற கழக ஆக்க வேலைகள் பற்றி யோசிக்கப்படும்,'' என மாவட்ட செயலாளர் ஏ. எல். சி. கிருட்ணசாமி அறிவிக்கிறார்.

### சேலம் மாவட்ட தி.மு.க. உறுப்பினர்களுக்கு

★

"4-4-54 மாலை 3 மணிக்கு, செவ்வாய்ப்பேட்டை கழகத்தில் தி. மு. கழக உறுப்பினர் கூட்டம் நடைபெறும். அதுபோது மே மாதம் 1, 2 தேதிகளில் சேலம் 2-வது மாநாடு நடைபெறுவதினால், நாம் செய்ய வேண்டிய கடமை, பல தீர்மானங்கள் நிறைவேற்ற ஆலோசிக்க வேண்டியிருப்பதால் வட்டக் கழக உறுப்பினர்கள் தவறாமல் வரவேண்டுமாய்க் கோருகிறேன்,' என, செயலாளர் இரா. மாணிக்கம் அறிவிக்கிறார்.

### முதல் ஆண்டு நிறைவு விழா

4—4—54 பகல் 10 மணியளவில், ஊ. பு. அ. சௌந்திர பாண்டியனார் நினைவு படிப்பக முதலாம் ஆண்டு நிறைவு விழா தோழர் ஈ. வே. அ. வள்ளிமுத்து தலைமையில் நடைபெறும். தோழர்கள் எம். ரத்தினம், எம். ஆர். கணேசன், ஆ. மி. அலிசேக் மன்சூர், டபிள்யூ. டி. துரைசாமி ஆகியோர் பேசுவர். இடம்: பாப்புலர் டாக்கீஸ், கோவில்பட்டி.

### குனியமுத்தூரில் இன்னிசை விருந்து

4—4—54 ஞாயிறு மாலை 6 மணிக்கு, தோழர் கு. அ. மனோகரன் குழுவினர் இன்னிசை விருந்து (இயக்கப் பாடல்கள்) தி. மு. க. திடலில் நடைபெறும்.


## கோவையில் இரு நாடகங்கள்

சிவாஜி கணேசன், சகஸ்ரநாமம், G முத்துகிருஷ்ணன், K.M. நம்பிராஜன், S A. கண்ணன், ரத்னமாலா, லலிதா. வசந்தா, காந்திமதி மற்றும் 50க்கு அதிகமான நட்சத்திரங்கள் நடிக்கும்

# பராசக்தி

3—4—54 சனி இரவு 10 மணிக்கு

சிவாஜி கணேசன், சகஸ்ரநாமம், பைலுவதி நடிக்கும்

# இருளும்-ஒளியும்

3-D டெக்னி கலர் நாடகம்

4—4—54 ஞாயிறு மாலை 7 மணிக்கு

கோவை ஷண்முகாவில்

இரு நாடகங்களுக்கும் தனித் தனிக் கட்டணங்கள்:—

டிக்கட்: ரூ. 10, 5, 2—8—0, 1—4—0

டிக்கட்டுகள் ராஜவீதி கவிஞர் பதிப்பகத்தில் கிடைக்கும்

—பைன் ஆர்ட்ஸ், கோவை.


# சென்னை முதலமைச்சர் பதவி

—:o:—

## காமராஜர் ஏற்றுக்கொள்வாரா?

சென்னை, ஏப்ரல் 2—

சென்னை சட்டசபைக் காங்கிரஸ் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள காமராஜர் இன்று டில்லியிலுள்ளார்; அவரை, காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டு சந்தித்துப் பேச்சு வார்த்தைகள் நடத்தும்.

காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டின் கூட்டம், 3-ந் தேதி ஞாயிறன்று நடைபெறுகிறது. முதல் மந்திரி பதவியிலிருந்து ஆச்சாரியார் விலகியது பற்றியும், காமராஜர், கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பதைக் குறித்தும் கூட்டம் விவாதிக்கும்.

கட்சித் தலைவராக மட்டும் இருந்துகொண்டு, முதல் மந்திரி பதவிக்கு வேறு யாரையாவது காமராஜர் சிபார்சு செய்வாரா, அல்லது அவரே முதல் மந்திரி பதவியையும் ஏற்பாரா என்பது பற்றியும் போர்டு ஆலோசிக்கும்.

சென்னையிலிருந்து விமானம் மூலம் அவர் டில்லிக்குப் புறப்பட்டுச் செல்லுகையில், எதிர்கால நடவடிக்கைகளைப் பற்றி அவர் குறிப்பிடவில்லை. தற்போதைக்கு எதுவும் முடிவு செய்யவில்லையென்றும், டில்லிக்குச் சென்று வந்த பின்னர்தான் எதுவும் சொல்ல முடியுமென்றும், நேருவின் யோசனைப்படியே நடக்கப் போவதாகவும் அவர் திட்டவட்டமாகக் கூறிவிட்டார்.

'புதிய மந்திரி சபையில் எத்தனை மந்திரிகள் இருப்பர்? பெண்களுக்குப் பிரதிநிதித்துவம் இருக்குமா?'' என்று கேட்கப்பட்டதற்கு, 'இதெல்லாம் புதிய முதல் மந்திரியைக் கேட்கவேண்டிய விஷயமாகும்; என்னைக் கேட்டால், எனக்கு தெரியும்?'' என்று, அவர் அளித்துள்ள பதிலும் இந்த நிலைமையில் சுட்டிக்காட்டப்படுகிறது.

### திரு—கொச்சி மந்திரிகள்

சம்பளத்தை குறைத்துக் கொள்வார்கள்!

திருவனந்தபுரம், ஏப். 1—

திரு—கொச்சி முதல் மந்திரியும், மற்ற மந்திரிகளும் தங்கள் சம்பளங்களில் ரூ 200 குறைத்துக்கொள்ளத் தீர்மானித்திருக்கின்றனர், வருமானங்களில் உள்ள ஏற்றத் தாழ்வுகளை சாத்தியமானவரை குறைக்க வேண்டுமென பிரஜா — சோஷலிஸ்டு கட்சியின் கொள்கைக் கிணங்க தங்கள் சம்பளத்தை ரூ. 700-லிருந்து ரூ. 500 ஆகக் குறைத்துக் கொள்ளத் தீர்மானித்திருக்கின்றனர்.

### ஆண்டு விழா

4—4—54 மாலை 3-30 மணிக்கு பெண்ணாகடம், கழக உயர்நிலைப் பள்ளி, மாணவர் இலக்கிய மன்றத்தின் சார்பில் தோழர் ஏ. உத்தண்டராமப் பிள்ளை தலைமையில் ஆண்டு விழா கொண்டாடப்பெறும். புலவர் வீ. உலகஊழியர் 'தமிழுக்குக்கதியாவார்' எனும் பொருள் பற்றி பேசுவார். இரவு 7-30 மணிக்கு, மாணவர்கள் நடிக்கும் 'கட்டபொம்மன்' எனும் நாடகம் நடைபெறும்.

### விடைபெற்றுக் கொண்டார்!

இதனிடையே 31—3—54ல், முதல் மந்திரி பதவியிலிருந்து விலகிக்கொள்ளும் ஆச்சாரியார், சக அமைச்சர்களிடமிருந்தும், அரசாங்கத்தின் பல துறைகளின் செயலாளர்களிடமிருந்தும், சிப்பந்திகளிடமிருந்தும் அவர் விடைபெற்றுக் கொண்டார்.

மேல் (சட்ட) சபை உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்யப் போவதில்லையென்றும், தொடர்ந்து அங்கம் வகிக்கப் போவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

★

### சட்டசபை ஒத்திவைப்பு

அசெம்பிளியில். சர்க்கார் கட்சித் தலைவரான சி. சுப்ரமணியத்தின் கோரிக்கைக்கிணங்க, சட்டசபைக் கூட்டத்தை தேதி குறிப்பிடாமல் சபாநாயகர் ஒத்திவைத்தார்.

தன் கோரிக்கையைத் தெரிவித்து, சி. சுப்பிரமணியம் தெரிவித்ததாவது:—

"இந்த நிலையில், பல முக்கியமான பிரச்சினைகளை சபையில் எழுப்பினால், அவைகளுக்கு நான் பதிலளித்து நடப்பது சாத்தியமானதாகவோ, உசிதமானதாகவோ இருக்காது."

"முக்கியமான விஷயங்கள் வருகின்றன; அவைகள் மீதெல்லாம் முடிவு செய்யும் பொறுப்பை, நான் இப்போது முற்றிலும் ஏற்க முடியாது; பொறுப்பேற்று என்னால் ஒன்றையும் செய்ய முடியாது'' என்றார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால், அறிஞர் அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, ஞானியப்ப நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இ. அன்பு, அன்னதுரை; [illegible]